# புனித திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பெருவிழா

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-06-30

*(இன்றைய வாசகங்கள்:*

*சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம்.* 1: 13-15, 2: 23-24,

*பதிலுரைப்பாடல்: திபா.* 30: 1, 3-5, 10-12,

*திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம்:* 8:7,9, 13-15,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்:* 5: 21-43)

*திருப்பலி முன்னுரை*

*அன்புக்குரியவர்களே, புனித திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். ஆண்டவர் இயேசுவுக்கும், அன்னை மரியாவுக்கும் தவிர, திருச்சபை கொண்டாடும் ஒரே பிறப்பு விழா திருமுழுக்கு யோவானுக்கு மட்டும்தான். இதிலிருந்தே அவரது சிறப்பையும், தனித் தன்மையையும் அறிந்துகொள்ளலாம். உலகத்திற்கு மீட்பைக் கொண்டு வந்த இயேசுவுக்கே திருமுழுக்கு அளிக்கும் பேற்றினை அவர் பெற்றிருந்தார். மெசியாவைச் சுட்டிக்காட்டும் கொடையையும் அவர் கொண்டிருந்தார். பழைய ஏற்பாட்டின் கடைசி இறைவாக்கினராகவும், புதிய ஏற்பாட்டின் முதல் இறைவாக்கினராகவும் திகழ்கிறார் எனவும், அவரைப் புதிய எலியா'' என்று அழைப்பதும் பொருத்தமானதே. மெசியா வருவதற்கு முன் இறைவாக்கினர் எலியா மீண்டும் தோன்றுவார் என்பது யூதர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைச் சுட்டிக்காட்டி, யூதர்கள் இயேசுவிடம் வினவியபோது, எலியா ஏற்கனவே வந்துவிட்டார்'' என்று திருமுழுக்கு யோவானைப் பற்றிக் குறிப்பிட்டார் இயேசு. இறைவனின்மீது கொண்ட ஆர்வத்தால் நெருப்பெனப் பற்றியெறிந்த இறைவாக்கினர் எலியா போலவே, திருமுழுக்கு யோவானும் தீயெனப் பற்றி எரிந்தார். இந்த விழாவில் நாமும் இறைவாக்கினராக, இயேசுவைப் பிறருக்குச் சுட்டிக்காட்டுபவராக, ஆன்மீக ஆர்வத்தால் பற்றி எரிபவராகத் திகழும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*நல்லாயனே எம் இறைவா!*

*உமது பணியினைத் தங்கள் வாழ்வில் ஏற்று, உமது அன்பினைப் பறைசாற்றும் திருஅவையின் உஊழியர்களை உமது அன்பினால், அரவணைத்து வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நம்பிக்கையின் நாயகனே இறைவா!*

*யாயிரின் மகனை உயிரோடு எழுப்பியது போல், எங்கள் வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற துன்பங்களிலிருந்து மீண்டு எழ வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*கருணைக்கடலே இறைவா!*

*குடும்பங்களிலும், சமூகத்திலும் வரும் சவால்களைக் கண்டு மனம் சோர்வடையாமல் அவற்றை எதிர்கொள்ள வேண்டிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பின் இறைவா!*

*ஏழை, எளிய மக்கள் மேல் அன்பு கொண்டு, அவர்களின் துன்பங்களில் நாங்களும் பங்குகொண்டு, அவர்களின் சுமைகளைத் தாங்கும் மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நலமளிக்கும் இறைவா!*

*இரத்தப் போக்குடைய பெண் உம்முடைய ஆடைகளைத் தொட்டாலே போதும், நான் நலம்பெறுவேன் என்ற நம்பிக்கையில் அவள் குணம்பெற்ற அந்த ஆழ்ந்த நம்பிக்கையில் நாங்கள் உம்மைத் தேட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அழைத்தலின் நாயகனே இயேசுவே,*

*'பெண்களின் பிறந்தவர்களில் யோவானைவிடப் பெரியவர் எவருமில்லை' என்று திருமுழுக்கு யோவானைப் பெருமைப்படுத்தினீரே. உம்மைப் போற்றுகிறோம். நாங்களும் அவரைப் போல, பிறருக்கு உம்மைச் சுட்டிக்காட்டும் முன்னோடிகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*உற்ற துணைவராம் இறைவா,*

*இங்கு ஒன்றாக குழுமியுள்ள எங்களை நிறைவாக ஆசிர்வதித்து நாம் ஒவ்வொருவரும் இறைவார்த்தையில் வேரூன்றி, அன்றாடம் அதை வாசித்து, சவால்கள் நிறைந்த உலகில் நிறைந்த பலன் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*வரங்களைப் பொழிபவராம் இறைவா,*

*எங்கள் பங்கு குடும்பத்தில் வாழும் எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், உமது நிழலில் புகலிடம் தேடும் இறையாட்சியின் மக்களாக வாழவும், உடல், உள்ள, ஆன்ம நலன்களில் வளரவும் தேவையான வரங்களைப் பொழிய வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*